இலண்டனின் 'கிளாஸ்கோ' பல்கலையில் முனைவர் பட்டம் பெற்ற – –பேரறிஞர் கால்டுவெல் குறித்தே தவறான தகவல்களைக் கூறியவர்!

# தமிழ்நாட்டு ஆளுநர் ஆர். என். ரவி, உண்மைக்கு மாறானவர் !

## சட்டப்பேரவையில் - இனிகோ இருதயராஜ் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜன. 26 -**

**சட்டப் பேரவையில், நேற்று முன் தினம் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் இனிகோ இருதயராஜ், "தமிழ்நாட்டு ஆளுநர் ஆர். என்.ரவி, உண்மைக்கு மாறானவர்!" என்று குற்றஞ்சாட்டினார்.**

**சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-**

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு எனது கருத்துகளை இதே அவையில் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த, தமிழ்ச் சமூகம் உண்மையான விடியலைக் காண இரவு, பகல் பாராது உழைத்துக் கொண்டு, திராவிட மாடல் ஆட்சியை பார் புகழும் ஆட்சியாக நடத்திக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

**மரபுகளை மதிக்காத ஆளுநர்!**

இந்த பெருமைமிகு சட்டப்பேரவை மன்றம் என்பது ஒரு மக்கள் மன்றம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் கூடுகின்ற மன்றம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்கள் பிரச்சினைகளை விவாதிக்கின்ற மன்றம். தென்னகத்து பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், அண்ணன் தளபதி அவர்களால் வழிநடத்தப்படுகின்ற மன்றம், வழி நடத்தப்பட்ட மன்றம். இந்த மன்றத்திற்கு என்று ஒரு மரபு இருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு என்று சட்ட விதிகள் இருக்கின்றன. பல்துறை வித்தகர்கள் நிரம்பியது இந்த மாமன்றம். இந்த மாமன்றத்தை ஒழுங்குபடுத்த மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். மாமன்றத்திற்கு என்று பல்வேறு பெருமைகள் இருக்கின்றன.

ஆனால், தொடர்ந்து இந்த மன்றத்தை ஒருவர் அவமதித்து செல்கிறார். 2022 ஆம் ஆண்டில் இதே அவைக்கு வந்தவர், முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து, பிறகு தேசிய கீதம் பாடப்பட்டு, ஆளுநர் உரையை வாசித்துவிட்டு எந்த வம்பும், தும்பும் செய்யாமல் சென்றார். அடுத்த வருடம் ஆளுநர் உரையில் சில பகுதிகளை படிக்கமாட்டேன் என்றார். கடந்த 2, 3 வருடங்களாக தேசிய கீதம் முதலில் பாட வேண்டுமென்று வம்பு செய்வதையே, சண்டித்தனம் செய்வதையே கிண்டித்தனம் என்று வம்பு செய்வதையே தொழிலாக வைத்துள்ளார். பொதுவாக ஒரு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும், இறுதியில் தேசிய கீதம் பாடுவதும்தான் காலம், காலமாக நாம் கடைப்பிடிக்கின்ற மரபு. பள்ளிகளிலும், பொதுக் கூட்டங்களிலும், அரசு நிகழ்ச்சிகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் இதுதான் நடைமுறை என்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன், பாரதிய ஜனதா ஆட்சி செய்கின்ற புதுச்சேரி, மகாராஷ்டிரா, ஒடிசாவில் கூட அந்தந்த மாநிலப் பாடல்கள்தான் முதலிலே, பிறகு, நிறைவிலே தேசிய கீதம் பாடப்பட்டு வருகிறது. குடியரசு தினத்திலும், சுதந்திர தினத்திலும்கூட தேசிய கீதத்தை இறுதியில்தான் பாடுவார்கள். ஒரு பேச்சுக்கு அவருடைய விருப்பப்படி தேசிய கீதத்தை முதலில் பாடிவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? சபை முடிந்துவிட்டது என்று நாங்கள் எல்லாம் எழுந்து வெளியில் சென்றுவிடுவோம். சபைக் காவலர்கள் என்ன செய்வார்கள், வேலை முடிந்தது என்று சொல்லி *light off* செய்துவிட்டு, இருட்டில்தான் அவரை வைத்துவிட்டு சென்றிருப்பார்கள்.

**தேசிய கீதம் RSS-ன் கணக்கீதம் இல்லை!**

'*ABCD*'-ஐக்கூட '*A*'-யிலிருந்துதான் படிக்க வேண்டுமென்று சொன்னால், நான் '*Z*'-லிருந்துதான் படிப்பேன் என்று சொன்னால், என்ன அர்த்தம்? மரபுகளை மாற்ற நினைத்த, நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் எல்லாம் பாடப்படுவதற்கு தேசிய கீதம் ஒன்றும் *RSS*-யினுடைய கணக்கீதம் இல்லை என்பதை நான் இந்த மன்றத்திலே பதிவிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய நாட்டினுடைய பூர்வகுடிகளாக, மண்ணின் மைந்தர்களாக எங்கள் தாத்தனும், பாட்டனும் போராடி பெற்றுக் கொடுத்ததுதான் இந்த நாட்டிற்குச் சுதந்திரம். அதன் வழியாக வந்ததுதான் தேசிய கீதம். இந்தியாவில் பிறந்த பூர்வகுடிகள் அந்த தவறை எப்போதும் செய்ய மாட்டார்கள். ஆளுநரோ அரசமைப்புச் சட்டத்தை மதிக்க மாட்டேன் என்கிறார். சட்டத்தை மதிக்கவில்லை. உங்களுடைய முதலாளியை யாவது மதிக்கலாம். பிரதமர் மோடி அவர்கள் குஜராத்தி னுடைய முதலமைச்சராக இருந்தபோது ஆளுநர் என்பவர் ஆளுங்கட்சிக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருக்கும் பொழுது ஆளுநருக்கு தனிப்பட்ட அதிகாரம் கிடையாது என்றாரே, அவரது கருத்துக்காவது நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டாமா? தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்பிரதிநிதிகளை மட்டும் அவர் அவமதிக்கவில்லை, தமிழக மக்களை அவமதிக்கிறார். கேரளாவிலும், நேற்று கர்நாடகாவிலும் இதே நிலைதான். மக்களை அவமதிக்கின்ற இவர்களுக்கு கடிவாளம் போடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இனிமேல் ஆண்டு தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற முறையை தடுக்க ஒத்த கருத்து கொண்ட முதல்வர்களுடன் இணைந்து பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்படும் என்ற புரட்சிகரமான அறிவிப்புக்கு தலைசாய்த்து இங்கு குழுமியுள்ள மக்கள் பிரதிநிதிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கிருந்து சென்ற ஆளுநர் அவர்கள் 10 நிமிடங்களில் ஓர் அறிக்கை வெளியிடுகிறார். அந்த அறிக்கையில் அவர் சொல்கின்ற அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்று, யார் உண்மைக்கு மாறானவர் அரசா, நீங்களா? அவர்தான் உண்மைக்கு மாறான விஷயங்களை மட்டும் பேசுபவர் என்று ஓர் உதாரணத்தை நான் இந்த அவையிலே வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். 4-3-2024 அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றிலே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய *Robert Caldwell* பற்றி குறிப்பிட்டுப் பேசும்பொழுது, "*Robert Caldwell, I saw written somewhere that he was a graduate. He is a school dropout, he didn't pass even high school.*" என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அதாவது ராபர்ட் கால்டுவெல் பள்ளி படிப்பை முடித்துவிட்டார். உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெறாதவர் என்று அவர் கூறியிருக்கிறார். *Robert Caldwell School dropout* அல்ல. பெருமைமிகு இங்கிலாந்து கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் *Ph.D.* அதாவது டாக்டர் பட்டம் பெற்றவர் என்பதற்கான சான்று, இதோ பேரவைத் தலைவர் அவர்களின் அனுதியைப் பெற்றுவிட்டேன். இந்தச் சான்றை அவையிலே சமர்ப்பிக்கின்றேன். இதோ அவர் படித்த *Ph.D.* பட்ட படிப்பிற்கான சான்றிதழ். இந்த சான்றிதழ்களுக்கான *original* இலண்டனில் இல்லை. அவர் வாழ்ந்த இடையன்குடி, பாளையங்கோட்டையில் *CSI* திருமண்டல பேராயரிடம் பத்திரமாக உள்ளது. வேண்டுமென்றால் அங்கு சென்று பார்த்துக் கொள்ளலாம். இல்லையென்றால் நான் *courier* கூட அனுப்புகிறேன். இப்படி பொது வெளியில் தொடர்ந்து உண்மைக்கு மாறான தகவல்களை பேசுகின்றவர், 'திராவிட மாடல்' ஆட்சி குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுகிறார்.

**உண்மைக்கு மாறான தகவலை வெளியிடுகிறார்!**

இந்தியாவின் பல மாநிலங்களுக்கு முன்னோடி திட்டமான மகளிர் விடியல் பயணம் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு பெண்மணியும் மாதத்திற்கு ரூ.888 சேர்த்து வைக்கிறார்கள். வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது என்று நீடித்த நிலையான வளர்ச்சி குறியீடுகள் குறித்த 2024 ஆம் ஆண்டு ஒன்றிய அரசினுடைய நிதி ஆயோக்கின் அறிக்கை கூறுகிறது. இது உண்மைக்கு மாறானதா? கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின்மூலம் ஒரு கோடியே 30 இலட்சம் பெண்கள் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். தன்னம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்கொள்கின்ற பெண்கள், அப்படி ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்த திராவிட மாடல் அரசை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மனித வளங்களை வளர்ப்பதில் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களைவிட தமிழ்நாடு முன்னேறியிருக்கிறது என்று இந்திய ரிசர்வ் வங்கியினுடைய 2023-2024 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி குறித்த ஆய்வேட்டில் தெரிகிறது. இந்த ஆய்வை உண்மைக்கு மாறானவை என்று சொல்கிறாரா? எந்த ஒரு மாணவனும் பசியோடு பாடம் படிக்க வரக் கூடாது. வெறும் வயிறோடு பிள்ளையை பள்ளிக்கு அனுப்பி வைத்துவிட்டோமே என்று எந்த தாயும் கவலைப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கில்தான் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த உன்னதமான திட்டத்தின்மூலம் சற்றேறக்குறைய 20 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இதுபோன்ற



நல்ல திட்டங்கள்தான் உயர் கல்வி மாணவர்கள் சேர்க்கையில் 43 சதவிகிதம் பெற்று இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக, இந்திய உயர் கல்வி நிறுவனமான *ISHA* பாராட்டுகிறது. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ரூ.909 கோடி மதிப்பீட்டில் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் மற்றும் பல்கலைக்கழக தொழில்நுட்பக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் 4,247 பள்ளி கட்டடங்களின் கட்டுமானத்திற்கு ரூ.1,350 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், நீங்கள் கல்வியின் தரத்தில் தமிழ்நாடு சரிவை சந்திப்பதாக முழு பூசணிக்காயை சோற்றில் அல்ல உங்கள் உண்மைக்கு மாறான அறிக்கையில் மறைக்க முயற்சி செய்கிறீர்கள்.

முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் என்றால் முடியாதவர்கள்; இவர்களின் வாழ்க்கை முடிந்துவிட்டது (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று பொறுங்கள். முடிந்து போய்விட்டது என்று உறவினர்கள் உதறிவிடும் நிலையிலே, ரேஷன் பொருட்களை அவர்கள் இல்லத்திற்கு கொண்டு சென்று வழங்குகின்ற தாயுமானவன் திட்டம்மூலம் 27.55 இலட்சம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வருகிறார்களே! வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பாதுகாப்பு ஆதரவு சூழலை உறுதிசெய்ய, 25 அன்புச்சோலை இல்லங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

ஒய்விருந்தால் இந்த அரசு குறித்து அவர்களிடம் சென்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நானும் இருக்கிறேன் என்று தன்னுடைய இருப்பைக் காட்டிக்கொள்ள, பேசுபொருளாக இருக்க மட்டுமே ஆசைப்படாதீர்கள். நாட்டில் மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். அதுபோல, அண்ணல் அம்பேத்கர் அயலகக் கல்வித் திட்டத்தின்கீழ் அதிகபட்ச உதவித்தொகை 36 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 385 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 162 கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டு, அவர்கள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பயின்று வருகிறார்கள். ஆனால், நீங்களோ தலித்துகளுக்கு எதிரான கொடுமைகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். மாணவர்தம் உயர்கல்விக்கு வழங்குகின்ற வகையிலே . . .

திராவிட மாடல் ஆட்சியிலே "நான் முதல்வன் திட்டத்தால், என்னால் *IPS* தேர்வை எழுதி, தேர்ச்சி பெற முடிந்தது" என்று ஒரு மாணவியின் கருத்து சமீபமாக சமூக வலைதளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது. கவர்னர் அவர்களே, நீங்களும் *IPS* படித்தவர்கள். அந்த மாணவியும் *IPS* தான். என்ன? அவர் உங்களை விட ஜூனியர். ஜூனியர் என்று குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். அவர்களிடம் உங்களுக்கு கற்றுக்கொள்ள ஏராளமான விஷயங்கள் உள்ளன. சீனியர், ஜூனியர் என்பதை மறந்து கற்றுக் கொள்ளுங்கள். உங்களை நீங்களே பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். சிறுபான்மையினர் வசிக்கின்ற சில மாநிலங்களில் கிறிஸ்துமஸ் விழாவைப் புறக்கணிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. இதனால் வன்முறை ஏற்பட்ட சூழ்நிலையில், இந்தியாவிலேயே முதல் கண்டனக் குரலை எழுப்பியர், நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் கிறிஸ்துமஸ் விழாவிற்கு இனி விடுப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், தமிழகத்திலே, நம்முடைய தமிழக முதல்வர் இங்குள்ள கிறித்துவ மக்களோடு, சிறுபான்மை மக்களோடு, இணைந்து கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடிய வரலாறு இந்த மண்ணில்தான். நாடு முழுவதும் சிறு பான்மையின மக்கள் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, தமிழகத்தில் அவர்கள் அமைதியோடு வாழ வழி வகை செய்து கொடுத்திருக்கிறது நம்முடைய 'திராவிட மாடல்' அரசு என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன்.

அதுமட்டுமல்ல, 2019 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியில் சிறுபான்மையின கல்லூரிக்கான உரிமைகள் *G.O. No.* 5-ன் வழியாக பறிக்கப்பட்டது. ஆனால், அந்த *G.O. No.* 5-ஐ ரத்து செய்து மீண்டும் சிறுபான்மையின கல்லூரிகளுக்கான உரிமையைப் பெற்றுத் தந்துள்ளார். இதற்காக வருகின்ற பிப்ரவரி 12 ஆம் நாளன்று, சிறுபான்மையின கல்லூரிகள் எல்லாம் நன்றி தெரிவிக்க இருக்கின்ற கூட்டம் நடக்க இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று கூட சிறுபான்மை மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்டப்படிப்பு மேற்கொள்ள 10 மாணவர்களுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, திருவாரூர், பெரும்பண்ணையூர், திருக்கோயில்களிலும், இராமநாதபுரம் மூக்கையூர் தேவாலயங்களிலும் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காசோலை வழங்கப்பட்ட நிகழ்வு நேற்று நடைபெற்றிருக்கிறது.

**பாராட்டுகளுக்கும் சாதனைகளுக்கும் சொந்தக்காரர் முதல்வர்**

எனவே, இத்தனை பாராட்டுகளுக்கும், சாதனைகளுக்கும் சொந்தக்காரரான 'திராவிட மாடல்' அரசினுடைய முதல்வர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சி தொடர, மீண்டும் 'திராவிட மாடல்' அரசு 2.0 ஆட்சி அமைய வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மக்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருக் கிறார்கள். அதற்கு சாட்சிதான் தினந்தினம் சமூக வலைதளங்களிலே மக்களும், பயனாளிகளும் தன்னிச்சையாக வந்து, ஆதரவு கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிந்து, 'திராவிட மாடல்' ஆட்சி 2.0 ஆட்சியிலே இந்தப் பேரவைக்கு நாமெல்லாம் வருகிறபோது, தமிழ் நாட்டுக்கு எத்தனை முறை வந்தாலும், டெல்லி எஜமானர்களுடைய கட்சி இங்கு வரப்போவதில்லை. டெல்லியினுடைய அடிமைகளும் இங்கு வரப்போவதில்லை. 234-க்கு 234 என வரலாறு காணாத வெற்றி பெற்று, எதிர்க்கட்சியும் நாம்தான், ஆளுங்கட்சியும் நாம்தான் என்ற நிலை வருகிறபோது-அதற்காக மிக சாதுர்யத்தோடு, மிக ப்பொறுமையோடு, திட்டமிடல் செய்து, இந்தப் பெருமையை உருவாக்கித் தந்து கொண்டிருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில் அவர் பேசினார்.

---

புதுக்கோட்டையிலிருந்து வேலூர் – திருச்செந்தூர் –

# திருநள்ளாறு நகரங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தாரீர்!

## சட்டப் பேரவையில் உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 26-

சட்டப் பேரவையில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-

**டாக்டர் வை.முத்து ராஜா:** புதுக்கோட்டை மாவட்டத்தின் தலைநகரமான புதுக்கோட்டை யிலிருந்து தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான வேலூர், திருச்செந்தூர், திருநள்ளாறு போன்ற நகரங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.



**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள் ஏற்கெனவே சென்னைக்கு பேருந்து இல்லை என்று கோரிக்கை வைத்தார்கள். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத் தின்மூலம் புதுக்கோட்டை யிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்கப் பட்டது. அதற்குபிறகு குளிர்சாதன பேருந்தும் இயக்கப்பட்டிருக்கிறது. அவை இரண்டையும் கொடுத்ததால் தற்போது அவர் திருச்செந்தூருக்கும் பேருந்து வசதி கேட்கிறார். அவருடைய கோரிக்கை வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.பி. அகிலன்

### சனவரி 26 (2016)



**இளம் வயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட துணைச் செயலாளராக – திருவள்ளூர் மாவட்ட அவைத் தலைவராகப் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், திருவள்ளூர் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடிகால 'மிசா' கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## தி.மு.க. தொண்டர் அணி

### மதுரை மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம் !

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் -ஒப்புதலோடு மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஜீ.முத்துகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்தியதாலும் மற்றும் எம்.ஜெகநாதன், பி. முனீஸ்வரன், ஆர். ஜெயசந்திரன், டி. முரளிதரன் ஆகியோருக்கு பதிலாக, **எம். நாகேந்திரன்** (41, ஜி.ஜி. ரோடு, சுந்தராஜபுரம், மதுரை), **கே.பாஸ்கரன்** (8, மகபூப்பாளையம், அன்சாரி நகர், மதுரை), **எஸ்.இப்ராகிம்** (1, பள்ளிவாசல் தெரு, கோரிப்பாளையம், மதுரை- 2), **எம். கார்த்திக்** (23, அய்யனார் கோவில் தெரு, செல்லூர், மதுரை), **இ. ஜெயராமன்** (தியாகி பாலு தெரு, மதுரை-2) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-01-2026.

**மாஸ்டர் பெ.சேகர்,**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோடம்பாக்கம் தே.மு. சிவலிங்கம்

### சனவரி 26 (1965)



**சிறுவயது முதலே தமிழ்ப்பற்றுடன் விளங்கிய இவர், தனது பகுதியில் இருந்த டாக்டர் தருமாம்பாள் மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழகமே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த மொழிப் போராட்ட காலத்தில், தான் தீக்குளிப்பதற்கு முதல்நாள், தனது நண்பர்களிடம் "நாளை இந்தி ஆட்சி மொழி ஆகிறது. இது துக்க தினம். கறுப்புச் சின்னம் அணியப்போகிறேன்" என்று கூறியிருக்கிறார்.**

**1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் விடியற்காலை நான்கு மணியளவில், வீட்டிற்கு எதிரே உள்ள மைதானத்தில் "உயிர் தமிழுக்கு; உடல் தீயிக்கு – தே.மு.சிவலிங்கம்" என்று எழுதி வைத்துவிட்டு, தீக்குளித்து உயிர் துறந்தார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.